இராஜா S. S. ஷண்முகதாஸ் அவர்களியற்றிய

சந்தவசனலங்கார பத்திரவல

செந்தமிழ்க்கதம்பம்

2-ஆம் பாகம்

காப்பி ரைட்

விலை அணா 2

... கிருஷ்ண பிள்ளை,

... நா. சி. பிரதர்ஸ்., மதுரை.

O-, 1MS04, ...
M31
179996

உ

குகமயம்.   மிகநயம்.

தமிழ் நாடகாசிரியச் சக்ரவர்த்தி, ஸ்ரீ ல ஸ்ரீ

T. T. சங்கரதாஸ் சுவாமி,

அவர்களின் மாணவரான

மதுரை செந்தமிழ் வித்துவான்

சந்தச் சரபம் இராஜா

S.S. ஷண்முகதாஸ் அவர்களால்

இயற்றப்பெற்ற

சந்த வசனலங்கார பக்திரஸ

செந்தமிழ்க் கதம்பம்

இரண்டாம் பாகம்.

மு. கிருஷ்ண பிள்ளை,

பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு

புக்செல்லர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,

மதுரை.

மதுரை விவேகானந்தா பிரஸில்

பதிப்பிக்கப் பெற்றது.

காப்பிரைட்]   1931   [விலை அணா 2

விளங்குமரன்றரு உ மிளங்குமரன் றுணை.

திரிசிராமலை அத்வைதவித்வ மதுரம் வடிவேற்சாமி அவர்களால் தரப்பெற்ற

சாற்று செய்யுள்கள்.

வெண்பா.

சங்கரதாஸ் சாமிமுத்துச் சாமியிவ ரேயென்பர்
இங்குளதா நாடகத்துக் கேற்றகுரு—துங்கமிகும்
பண்முகத்தாற் செந்தமிழைப் பாடுஞ்சந் தச்சரபச்
சண்முகத்தைக் கண்டறியார் தாம்.

இரட்டையாசிரிய விருத்தம்.

கனகபண கங்கணச டாமகுட தாரிதரு
கந்தனடி சூடு மகுடம்
கல்விக் கிரீடஞ்சங் கீதக் களஞ்சியம்
கலைவண்ண வான்பொக் கிஷம்
தனசுகுண பீடநா டகமேடை யாசிரியர்
தம்மிலுயர் சிரோரத் தினம்
சங்கரனுங் கன்னிச் சமீன்சரப மாமுத்து
சாமியிவ ரென்பர் புலவோர்
நனவுசெல வேழிசை யறிந்துதவி செய்துதமிழ்
நாடக வரங்கு வருவோர்
நயனமிரு செவிமகிழ நாரத னகத்தியனு
நாடொருமெய் புளக மேற
தனமலியு மதுரைசந் தச்சரப சண்முகத்
தாசனிசை கவிகேட் டவர்
சங்கரனு முத்துமிவ னொருவனே யாமென்று
தப்பாது சொல்வர் மாதோ.

மதுரம் வடிவேற்சாமி
யாதவர் புரம்
திரிசிராமலை.

954

உ

குகமயம்.

பக்திரஸ செந்தமிழ்க் கதம்பம்.

இரண்டாம் பாகம்.

இன்னிசை வெண்பா.

சந்தமுத லோங்கத் தருநற் றலைமகளின்
செந்தமிழா லேதுதியைச் செய்யரும்பேர் சீரசைகள்
கந்தனுக்கேன் வந்தனையாய்க் காணுமுறை வேணுதநேர்
தந்தருள்மா தந்திமுகத் தா.

1. நானே கோசிகனுகில் அரிச்சந்திரன்—என்ற மெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மூலாதாரப் பரம் பொருளேயேதுக்கும்
முன்வரு மைங் கரனே
நமஸ்து நமஸ்து மூ

அநுபல்லவி.

வேலாயு தன்சோதரா
வேண்டினே னுண்டருள்
பூண்டிடத் தாண்டவமிடும்
வித ரண குண கணபதி
இது தருணம் வர மனதுவை மூ

சரணம்.

மாலான வல்லபை லோலா
சங்கரனின் பாலா பக்தர்கனு
கூலா ஞாலந்தொழு
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
சத்திய வாழ்வை நத்து ஷண்முகன்
பத்திக்கன்புயர் முத்தியை யருள் மூ

2. இராகம்-சிந்துபைரவி-தாளம்-ரூபகம்.

தன தனன தா ன ன
தன தனன—என்ற மகுடச் சந்தம்.

சந்தப் பல்லவி.

கலைமகளே ஸ்ரீவேதக் க

கரத்தில் சாரதா கொண்டு
திறத்தின் பேரதாய் நின்ற க

கனரா கதாள விநோத
கற்பனை • யொப்பிட செப்பிடு க

கற்க கற்க கசடறுமெனுஞ்
சொற்களுக் கிசைந்து காணுங் க

கானசுரக் கீதமெனும்
ஞானவேத போதத்வீத க

சந்த வசனம்.

கருணாகர வாரிதியே
கற்பகமே கவிமழையே

கார்த்தருளடி யார்களைச்ச
தா வந்திடு மொருமன
தா சந்தச்சரபக
தா செந்தமிழ் ஷண்முகன்
தா யெனுமதி யமுதமே க

---

3. பால்காவடி யானந்தந் திருவடி—என்ற மெட்டு.

கண்ணிகள்

கோவிந்தா வைகுந்தா ஸ்ரீஹரி
கோபாலா மனம் வை
தயைசெய் கோ

பாவிந்தை யான சந்தா
பகருந் தேவகி மைந்தா
மாவிந்தை யான சொந்தா
மாக்ஷிமை யாமுன் பதந்தா கோ

உரிவெண்ணெய் யுண்ட வாயா
வுரலில் கட்டுண்ட நேயா
கரியையாட் கொண்ட மாயா
காருண்ய முற்றச காயா கோ

கஞ்சனை வதைத்த போதா
காளிங்க நர்த்தன பாதா
வஞ்சக மற்றநன் னீதா
வாழ்விக்க வந்தசங் கீதா கோ

வேதம் புகழுல் லாசா
வேணுகா னப்பிர காசா
மாதவனென் னும்விஸ் வாசா
மைந்தன்ஷண்மு கன்றுதி பாசா கோ

4. சேந்தூர் வேலாண்டி—என்றமெட்டு.

கடினசந்தப்பாட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

மதுரை மீனாக்ஷி
ஆக்ஷி திரு ம

அநுபல்லவி.

நின்—மகிமையே நற்காக்ஷி
ஆக்ஷி திரு ம

சந்தக்கண்ணிகள்.

மனக்கவலை தினக்கவலை
எனக்குளது வுனக்கிலையா ம

மகிதலா திகள்தொழு
சுகமகா வகையருள்
பகவதி ம

மரகதவ யிரமுறுநல்
மணி மகுட ம

மதிபதறி சிதறியுன ததிமதுரத்
துதிசெயவென் னிதயமதி, லுதயமிடு
நிதிபரவிப் பதியருளே கதியருள்செய் ம

வசன சந்தம்.

ஏ—மங்களாகரப்ர சங்கவாசனி
மகாகாளி மாவம்பிகா மாயீஸ்வரி
மதுரிதகல் யாணி ம

சரணம்.

இதுநிதியோ வுனது
இணையடி போற்றி செய்யும்
இந்தச் செந்தமிழ் சந்தச்சரபகு
ழைந்தைச் சண்முகன் சிந்துக் கருள்திரு ம

ஈஸ்வரன்றுதி.

5. இராகம்-மத்யமாவதி-தாளம்-ஆதி.
நீபோயுரைப்பா யனுமானே—என்ற எடுப்பு சந்தம்.

பல்லவி.

சோமசுந்தரப் பெருமானே—திரு
மாமதுரைமகிமைத்
துடங்குதலை வடம்புனைந்து
நடம்புரியும் கடம்பவன சோ

அநுபல்லவி.

காமதகனு முக்கண்ணு
கரிவரதன் மைத்துனு
தாமதமில்லாது வந்தாள்
சந்தச்ச ரபஷண் முகன்பு கழுந்திரு சோ

காமவாழ்க்கையாம் பூதல மீதினிற்
கண்கலங்கி வாடாது

தற்— காநீவினை யணுகிடாது
மாமதியொடுமல ரொடுபுனலணிந்திடும்
மங்களச்சொல் பொங்குமெங்கள்
சங்கஞானந் தங்குமதுரை சோ

6. இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ஆதி.

தன தான தந்தன ஞ தா
தனந் தந்த தன—தனந் தந்த தன.

என்ற மெட்டு பின்மகுட வசன சந்த பல்லவி.

தணிகா சலாதிபனே ஓம்
சடாக்ஷரனே ஷண்முகனே குகனே தணி

சம்போ வரஹர முருகா சரஹணப வனே
சற்சனர் தவனே யச்சுதன் மருகா
மெச்சும் தணி

சந்திக்கறையிலுறு தொந்திக்கிளையவனே
சிந்திக் கருளவரு தணி

சங்கு ,சேகண்டி தவண்டை துத்தாரி
தவல் முரசு நாகசுர பஜனைகள் சதா
துதிபுரி பதா
துதிபுகழ் கதா
நிதியருளி தா
அதிபதி சுதா
புனிதா தணி

ஏ சத்தி யிளங் குமரா முருகா
அருகே வருகா தென
பத்திவளங் தெரிந்தே வருவாய்
குருவாய் விரைவாய் தணி

சா தனக ளீ தினமு மே தினித கா து தணி

சாலோக சாமீப சாரூப சாயுச்யமருள் தணி

சமணரைக் கழுவினிற்
கொழுவியோ யழகு தணி

சரணம்.

அணியணியாய்வரு ஜெனனுகூலா
அரஹரவேல்மயி லாவெனு நூலா
மணிகிண்கிணி யசை பெருமருட்காலா
மரகதமயின்மிசை வருஞ்சீ லாநின்
மைந்தனுஞ்சங் தச்சரப
செந்தமிழ்ச் சண்முகனுரை தணி

---

7. இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

தனதன னு தனன தானு
தனதன னு—என்ற மெட்டு.

பின் வசன சந்தம்

பல்லவி. தனித்தனி சந்தம்.

கழுகுமலைக் கடவுளேகுகா க
காவா வெனக் கருதப்புகுங் ட

காருண்ய லாவண்ய மாபுண்யத் தேவளரு க

கலியுகத்தி னலியகற்ற
வலியவேலி ஞெலிபுகட்டிடு க

காவடிகோ டானகோடி கூடிவந்து
பாவடியோ டாடிப்பாடித் தேடிமுந்திடு க

கதிர்வேல் பிடித்த சுரார்தம்
மெதிர்சென் றுவென்று நின்றுறை க

வசன சந்தம்.

கடவுளே முருகா சரஹண பவஷண்முகனே
கந்தப்பா கலியுகவரதனே யென்
கலிதீர் கலிதீர் கலிதீ ரெனதுதி க

கதிதரு மதிநிதி யுனைவிட
யிதுததி பதியினி லெவரெனக்
கருதியே யுறுதியாய் வருதிடு க

சரண சந்தம்

அழகுமா மயில் மீதிலேறி
அந்தமாமேரு வைவலம்
வந்தமாசரப ஷண்முகனேவா க

---

8. இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

தன தானதந் தந்தன தந்தன
தனன தனதா னன தனதன—தான

என்றமெட்டு வரிசைசந்தம்.

பல்லவி சந்தவரிசை.

கதிர்காம கர்ப்பூரக் கந்தன் துணை

கவியால் புவியோர்துதி. புரிகதிர் கா

கந்தாவா வென் றோதுமடியவரை
யாதரிக்கும் தென்கதிர் கா

நற்—கற்பூரச் சுடரொளியின்
பொற்பூரப் புகழ்பெரு கதிர் கா

அன்று—கானக்குற மானைப்புணர்
ஞானப்பிர தானக்கதிர் கா

பால்—காவடி— வந்து கோடானு கோடிதினம்
பாவடி— புகழ் கொண்டாடும் ஞானகதிர் கா

கரு—ணகர விபூதிப் பிரசாத கர்த்தன்
சித்தன் சுத்தன் அத்தன்
யெனுங்கதிர் கா

புகழ்—கற்பகத்தருவிற் கொப்பெனப்புவியில்
செப்பரபல்யநல் லற்புதக்கதிர் கா

என்றுங்—கனத்த மயூர மதிலனு
தினத்து மனத்து டைய கதிர் கா

திரு— கார்த்திகா
கதிரயம்பதியோய் முருகா வரோகரா
கடவுளே
சரஹணபவா ஷண்முகா
சடாக்ஷரா
கதியருள்
துதிபுரி மதியிதற் கெனவருகதிர் கா

...-600 003.

வசன சந்தம்.

மா— கவியருணகிரித் திருப்புகழ்ப்ரிய
கந்தா— வந்தாள்— சந்தச்சரப
சிந்தா— சொந்தா— ஷண்முகன் றுதி
விந்தா— யெந்தா— யெனுங்கதிர் கா

9. இராகம்-கேதாரகௌளம்-தாளம்-ஏகம்.

தன தனனா—
தந்தானத்தானதனந் தனனா
தன தனனா—

என்ற கடின சந்தம்.
சந்தக் கண்ணிகளின் பல்லவி.

பழனிமலே
பண்டாரத் தெண்டாயுத னின்றாடும் ப

நெய்ப்— பால் தேன் யிளநீர் பன் னீரொடு
வேல் வேல் முருகாவென் றோதப்பெரும் ப

சொற்—பண்டுயோகமக ரிஷிகளின் கியாதி
கண்டுகொண்டுயரும் போகர் சமாதிப் ப

பல—பழபஞ்சாமிர்தா பிஷேகன் அன்பர்கள்
தொழவந்தாண்டருள் விவேகன் இன்புயர் ப

திருப்—பரங்கிரிக் கழுகுமலேச் செந்தூர்த்
தலங்களின்நின் றருள்குமரன்சேர் ப

அநும்— பாதக்கொரடுலங் கோடுகெளபீன
நீதவேதாந்த போதரகிதன்வளர் ப

சரண சந்த வசனம்.

கம்— பத்திக்கொருவித்து சடாக்ஷர
சத்திக்கொருசித்து கடாக்ஷிய
யுத்திக்கொருசத்து ஷண்முகன்றுதி
புத்திக்கொருமுத்து எனப்பெரும்
பால ராமன் மருகன் புகழ்திரு
ஞாலம் போற்றும் முருகன் மகிழ்தரு
பஞ்சரத்தினத் திருப்புகழ்ப் ரிய
செஞ்சொல் மாலே யெனும்
விஞ்சையிற் குறிய
பா லவடி வே லனருஞ் சீ லன்குறக்
கோ லனுமை
பாசநேச வாசதேச
தாசர்பூசு மாசுகாதிப் ப

10. இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

தனன தந்தனு தனு தன
தனன தந்தனு—என்ற மெட்டு.

மகுட பல்லவி.

கடவுளே குகா கலியுகக்
கடவுளே குகா கலியுகவரதக்
கடவுளே குகா
கதியருளென துதிபுரிந்திடு
மதியிதையரு ளதிபதிசெந்திக் க

கந்தப்பா திணைக்காவில்
வந்தப்பா யெனைப்பாரு க

காசினியோர் பூசித்திட
நேசித்திடுந் தேசிகனே க

கருணையாய்த் தருணம் மெய்
யுரனுமென் னிரணயப் பொருளெனும் க

கானசந்தனே யெனதுயரெனும்
ஞான சொந்தனே க

காத்தரு ளன்பினிதா
பூத்துயர் துதியைசதா
வத்தரு ளினியபதா
மாத்விதா க

கா கார்த்திகனே
கா காருண்யனே
கா காவலனே
கா கழுகுமலைக் க

கா ஒமுரு
கா மால்மரு
கா நீவரு
கா தெனவா க

சரணம்.

இடபவாகனக் கிருபாகரன்பாலா
இனியதமிழிற்குடி யிருக்குஞ்சுசீலா
திடபுயாசலசிங் காரசெவ்வேலா
செந்தமிழ்சந் தச்சரப
சிந்துஷண்மு கனுளத்து க

11. இராகம்-தேசிகம்--தாளம்-ஏகம்.

தனத் தான தனத் தான தனத்தா

என்ற சந்த மெட்டு.

பல்லவி.

செந்தி—ஆறுமுகனே யெந்தனை வந்து
ஆண்டிட வேண்டினேனே யுந்தனை செந்தி

அநுபல்லவி.

இதைவிட—வேறுமுனக்குண்டோ யேதுஞ்சிந்தனை செந்தி

சரணங்கள்.

கோருவரம் தாதா குகனேபொற் பாதா
குழந்தைமே லின்னும் வாதா சூதா
குழந்தைமே லின்னும் வாதா ஆ ஆ செந்தி

துகையரா.

கோலா கலாவள்ளி லோலாவிசாலானு
கூலா மறை
மூலாநன் னூலாரன் பாலாசெவ் வேலாசு
சீலா முறை.

பாட்டு.

பாரும்வி சாகா நற்
பாலாபி ஷேகா யிப்
பாரோர்பு கழ்ஷண்முகா விவேகா யிப்
பாரோர்பு கழ்ஷண்முகா ஆ ஆ செந்தி

ஏதுக்கிந்த நெஞ்சம்
என் மீதிலென்ன வஞ்சம்—இந்த
ஏழைக்குன்னடியே தஞ்சம்
தயைசெய் கொஞ்சம்
ஏழைக்குன்னடியே தஞ்சம் செந்தி

இரண்டாம் பாகம் முற்றுப்பெற்றது.

புதிதாக வெளிவந்திருக்கும் பக்திரஸக்கீதங்கள்.

ஸ்ரீமான் மாம்பழக்கவிச்சிங்க நாவலரவர்கள் சகோதரர் குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ M. R. S. வேல்ச்சாமிக்கவிராயர் அவர்கள்இயற்றியதண்டபாணித் தெய்வ ரஞ்சிதமெனும் பக்திரசக்கீர்த்தனம் முதற்பாகம் .... 0—5—0

ஷை இரண்டாம் பாகம் ... 0—5—0

ரெட்டிநகர் வித்வான் இராமசாமிக்கவிராயர் அவர்களியற்றிய பக்திரசக்கீதாமிர்தம் 0—4—0

நாடகாசிரிய சக்ரவர்த்தி ஸ்ரீலஸ்ரீ T. T. சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய ஒன்பது நாடகச் சரித்திரங்கள் சேர்ந்த ஒரு புஸ்தகம் 3—0—0

சோழவந்தான் ஸ்ரீமான் அரச சண்முகனூர் மருகர் சோமசுந்தரம் பிள்ளை என்ற கவிக்குஞ்சர பாஷியம் அவர்கள் இயற்றிய பக்திரசக்கீர்த்தனம் .... 0—4—0

மதுரை, சபாரஞ்சித R. V சத்திவேலாச்சாரி அவர்கள் இயற்றிய குமபக்கடவுள் பஜனாமிர்தம் புதிதாக வெளிவந்தது .... 0—5—0

ஷையாரியற்றிய வேணுகானம் என்ற நூதன பக்திரசக் கீர்த்தனம் .... 0—5—0

உத்தமபாளையம் டிராமா உபாத்தியாயர் U. P. காமாட்சியாபிள்ளை அவர்கள் இயற்றிய விநோதபரமானந்தக் கீர்த்தனம் ... 0—5—0

ஷை யாரியற்றிய இந்து தேசாபிமானிகள் இனிய ரமணியகீதம் ... . 0—5—0

☞ மு. கிருஷ்ணபிள்ளை,

பி. நா. சி. பிரதர்ஸ் எஜண்டு,

புக்ஷாப், மதுரை.

விவேகானந்தா பிரஸ், மதுரை-31.